**செய்தி வெளியீடு எண்:612** **நாள்: 16.09.2017**

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் இன்று (16.09.2017) சென்னை உயர்நீதிமன்ற பாரம்பரிய கட்டடத்தின் 125–வது ஆண்டு விழாவில் ஆற்றிய உரை**

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா
அவர்களை வணங்கி,
இவ்விழாவிற்கு தலைமையேற்றிருக்கும்
மாண்புமிகு உச்சநீதிமன்ற
தலைமை நீதிபதி,
நீதியரசர் திரு **தீபக் மிஸ்ரா** அவர்களே!
மத்திய அரசின் மாண்புமிகு சட்டம்
மற்றும் நீதித்துறை அமைச்சர்
திரு **ரவிசங்கர் பிரசாத்** அவர்களே!
மாண்புமிகு உச்சநீதிமன்ற நீதிபதி நீதியரசர்
திரு **R.K.அகர்வால்** அவர்களே
மாண்புமிகு உச்சநீதிமன்ற நீதிபதி
நீதியரசர் திருமதி **R.பானுமதி** அவர்களே!
மாண்புமிகு உச்சநீதிமன்ற நீதிபதி
நீதியரசர் திரு **சஞ்ஜெய் கிஷன் கவுல்** அவர்களே!
சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி
நீதியரசர் குமாரி **இந்திரா பானர்ஜி அவர்களே!**
வரவேற்புரை நிகழ்த்திய
சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி
நீதியரசர் திரு **எஸ். மணிக்குமார் அவர்களே!**
சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி
நீதியரசர் திரு **ஹுலுவாடி G. ரமேஷ் அவர்களே!**
நன்றியுரை நிகழ்த்த உள்ள
சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி
நீதியரசர் திரு **G. செல்வம் அவர்களே!**
மரியாதைக்குரிய இந்திய அரசின்
தலைமை வழக்குரைஞர்
திரு **K.K. வேணுகோபால்** அவர்களே!
மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள்
மற்றும் சிறைத் துறை அமைச்சர்

திரு **சி.வி. சண்முகம்** அவர்களே!
மரியாதைக்குரிய தமிழக அரசின்
தலைமை வழக்குரைஞர்
திரு **விஜய் நாராயன்** அவர்களே!
அரசு வழக்கறிஞர்களே!
அனைத்து வழக்கறிஞர் சங்கங்களின்
தலைவர்களே! வழக்கறிஞர்களே!
உயர் நீதிமன்ற அலுவலர்களே!
பிற மாநிலத்திலிருந்து வருகை தந்துள்ள
உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்களே
உங்கள் அனைவருக்கும் முதற்கண்
எனது வணக்கத்தைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.
சென்னை உயர்நீதிமன்ற பாரம்பரிய
கட்டடத்தின் 125வது ஆண்டு விழாவில்
கலந்து கொள்வதில்
நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

நீதி என்பது மக்களுக்கு அரசியலமைப்பு
சாசனம் அளிக்கும் உரிமை.
பொதுமக்கள் நம்பிக்கையின்
இருப்பிடம் நீதித்துறை.

நமது நாட்டின் நீதி முறைகள்
உலகத்திலேயே பழமையானவை.
அதுமட்டுமல்லாமல் அது ஒருவரால்
ஒரே நாளில் உருவாக்கப்பட்டது அல்ல.
எண்ணற்ற திட்டங்கள்,
தலைமுறை தலைமுறையாக
மக்களிடம் காணப்பட்ட பொறுமை
ஆகியவற்றை மூலதனமாக கொண்டு தெளிவான
திட்டமிடுதலாலும், பலரின் பெருமுயற்சியினாலும் ஏற்பட்டது.

கடந்த சில நூற்றாண்டுகளாக
உலகம் முழுவதும் இயங்கிய
சட்ட அமைப்புகளால் உருவான
நன்முறைகளை உள்வாங்கி
இத்துறையானது

தன்னைத்தானே மாற்றிக் கொண்டு
வளர்ந்து வருகிறது.

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில்
‘The Indian High Courts Act 1861’
அதாவது இந்திய உயர்நீதிமன்றங்களின்
சட்டம் 1861 என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டு, விக்டோரியா மகாராணியால்
வெளியிடப்பட்ட சாசனத்தின் அடிப்படையில் மெட்ராஸ்
உயர்நீதிமன்றம் 1862 ஆம் ஆண்டு
ஏற்படுத்தப்பட்டது.

இந்த உயர்நீதிமன்றம்
ஆந்திரா, கேரளா பகுதிகளையும்
உள்ளடக்கியதாக இருந்ததால்
அப்போதைய மெட்ராஸ் பிரசிடென்ஸி
முழுமைக்கும் இது
High Court of Judicature at Madras என உயர்நீதிமன்றம் அமைந்துள்ள
இடத்தை குறிக்கும் வகையில்
பெயரிடப்பட்டது.

தற்போதைய சென்னை உயர்நீதிமன்ற
கட்டடத்துக்கு முன் உள்ள
கொய்யா தோப்பு (ஜார்ஜ் டவுன்)
என்ற இடத்தில்தான்
சென்னை உயர்நீதிமன்றம்
இயங்கி வந்தது.

பின்னர் விக்டோரியா மகாராணி
ஒப்புதல் அளித்த பின்புதான் தற்போதைய உயர்நீதிமன்றக் கட்டடம் கட்டப்பட்டது.

இந்தக் கட்டடம் 12 லட்சத்து 98 ஆயிரத்து
163 ரூபாய் செலவில் இந்தோ–சார்செனிக்

முறையில் 1892 ல் ஹென்றி இர்வின்
என்பவரின் வழிகாட்டுதலின்படி
கட்டப்பட்டது.
இந்தக் கட்டடம் 1892 ஆம் ஆண்டு
ஜூலை 12 ஆம் நாள் தொடங்கப்பட்டது. இந்தியாவிலேயே

சென்னை உயர்நீதிமன்றக் கட்டடம்தான்
மிகச் சிறந்தது என அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.
கட்டடக்கலையின் சிறந்த உதாரணமாக
இந்தக் கட்டடம் திகழ்கிறது.
அழகான வண்ணம் தீட்டப்பட்ட
கட்டடத்தின் கூரைகளும்
வண்ணக் கண்ணாடிகள்
பொதிந்த கதவுகளும்
மிக்க கலைநயத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.
இங்கு மிக உயரமான மாடகோபுரத்தில்
கலங்கரை விளக்கம்  செயல்பட்டு வந்தது.
பின்னர் இந்தக் கலங்கரை விளக்கம்
மெரினா கடற்கரைக்கு மாற்றப்பட்டது.

சென்னை உயர்நீதிமன்றம் பாரபட்சமின்றி
நீதி வழங்கும் அமைப்பாக இன்று வரை
செயல்பட்டுக் கொண்டு வருவது மிகவும் பெருமைக்குரிய விஷயமாகும்.
நீதியின் வரலாறு, கட்டடக்கலை, சட்ட சாஸ்திரங்களின் பாரம்பரியம்
என்ற மூன்று பெருமைகளை உள்ளடக்கியது
சென்னை உயர்நீதிமன்றம் என்றால் அது மிகையாகாது.

இந்திய அரசியலமைப்பில் நீதித்துறை,
ஆட்சித்துறை, சட்டமன்றம் ஆகிய மூன்றும்
தங்கள் எல்லைக்குள் சுதந்திரமாக செயல்பட வேண்டும். அப்போதுதான்
பொதுமக்கள் அமைதியுடனும், மகிழ்ச்சியுடனும் வாழமுடியும்.
நமது மாநிலத்தைப் பொறுத்தவரை
இம்மூன்று பிரிவுகளும் சுதந்திரமாக செயல்படுகின்றன என்பதை
நான் பெருமகிழ்ச்சியுடன்
தெரிவித்துக்கொள்கிறேன்.

விரைவாக நீதி கிடைக்கச் செய்வதைக்
கருத்தில் கொண்டு, உள்கட்டமைப்பு வசதிகள்
மற்றும் பணியாளர் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் நீதிமன்றங்களின்
தேவைகளுக்கு உடனுக்குடன்
நிறைவேற்றும் உணர்வு கொண்ட
அரசாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி
செயல்படும் அம்மா அரசும்
செயல்பட்டு வருகிறது என்பதை

பெருமிதத்துடன் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா
அவர்களின் பொற்கால ஆட்சியில்,
சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை கட்டடங்கள் கட்டுவதற்கு
56 கோடியே 34 லட்சம் ரூபாய்
வழங்கப்பட்டுள்ளது.

அருங்காட்சியகம் மற்றும் கலையரங்கம்
அமைப்பதற்கு 10 கோடி ரூபாய்
வழங்கப்பட்டுள்ளது.

100 கோடி ரூபாய் செலவில்
ஸ்ரீரங்கத்தில் தேசிய சட்டப்பள்ளி
துவக்கப்பட்டுள்ளது.
மாற்றுத் தீர்வு மையம் உருவாக
நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு
2011–12 முதல் 2016–17 வரை ஆறு ஆண்டுகளில்
மாவட்டம் மற்றும் கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள்
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள்
மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள், சார்பு நீதிமன்றங்கள்,
மகளிர் நீதிமன்றங்கள் உள்ளிட்ட 33 வகையான
419 புதிய நீதிமன்றங்களை
ஏற்படுத்த ஒப்புதல் வழங்கியுள்ளது என்பதை இங்கே பெருமையுடன்
குறிப்பிட விரும்புகிறேன்.

மேலும் மாண்புமிகு அம்மா அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தின்
பெயரை தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என்று மாற்றியமைப்பதற்கு
மத்திய அரசை வலியுறுத்தி
சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு
மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டது.

குறைந்த செலவில் தரமான சட்டக்கல்வியை
மாநிலம் முழுவதும் உள்ள மாணவர்களுக்கு

வழங்கிட வசதியாக விழுப்புரம், தருமபுரி, இராமநாதபுரம் ஆகிய நகரங்களில் புதியதாக சட்டக் கல்லூரி தற்போது இயங்கி வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள்
வழக்கறிஞர்கள் தங்கள் சேமநல நிதியை உயர்த்தி வழங்க
விடுத்த கோரிக்கையினை ஏற்று,
சேமநல நிதியை 2 லட்சம் ரூபாயிலிருந்து
5.25 லட்சம் ரூபாயாக உயர்த்தி
வழங்கப்பட்டு வருகிறது.
**இதை 7 லட்சம் ரூபாயாக சேமநல நிதி**
**உயர்த்தி வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான**
**செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.**

இதனை பெறுவதற்கு சேவை கால வரம்பு
எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களிலுள்ள
உள்ள நீதிமன்றங்களுக்கு
புதிய கட்டடங்கள், மாண்புமிகு நீதிபதிகளுக்கான
குடியிருப்புகள் உட்பட நீதித் துறையின்
உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாட்டிற்காக மாண்புமிகு அம்மாவின் அரசினால்
பல்வேறு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அவற்றில் 47 நீதிமன்றக் கட்டடங்களில்
185 நீதிமன்ற அரங்கங்கள் கட்டும்
பணிகளில், 21 கட்டடங்களில்
75 நீதிமன்ற அரங்கங்கள் கட்டி முடிக்கப்பட்டன
20 கட்டடங்களில் 83 நீதிமன்ற அரங்கங்கள்
கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன
மற்றும் 6 கட்டடங்களில் 27 நீதிமன்ற
அரங்கங்கள் கட்டும் பணிகள்
தொடங்கப்பட உள்ளன.

75 கோடியே 63 லட்சம் மதிப்பீட்டில்
நீதிபதிகளுக்கான 32 கட்டடங்களில்,
107 குடியிருப்புகள் கட்டும் பணிகளில்,
5 கட்டடங்களில் 11 குடியிருப்புகள்

கட்டி முடிக்கப்பட்டன. 22 கட்டடங்களில்
67 குடியிருப்புகள் கட்டும் பணிகள்
நடைபெற்று வருகின்றன மற்றும்
5 கட்டடங்களில் 29 குடியிருப்புகள்
கட்டும் பணிகள் தொடங்கப்பட உள்ளன.
ஆக மொத்தம் 2011–12 ஆம் ஆண்டு முதல்
2016–17 ஆம் ஆண்டுவரைஇப்பணிகளுக்காக
883 கோடியே 61 லட்சம் ரூபாய் நிதி ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதி ஆண்டில் 51 கோடியே
28 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2
கட்டடங்களில் 20 நீதிமன்ற அரங்கங்கள்
கட்டும் பணிகள் தொடங்கப்பட உள்ளன.
மேலும் 16 கோடியே 16 லட்சம் ரூபாய்
மதிப்பீட்டில் 26 குடியிருப்புகள் கட்டும்
பணிகளும் தொடங்கப்பட உள்ளன.

நீதித்துறையின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றும் உணர்வுள்ள அரசாக
மாண்புமிகு அம்மா அவர்களின்
அரசு தொடர்ந்து செயல்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாற்று சிறப்புமிக்க சென்னை உயர்நீதிமன்றத்தில்
பல வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்புகளை வழங்கி
நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளது.
இந்த இனிய நன்னாளில், இவ்வரசு சிறப்புமிக்க விழாவில்
கலந்து கொள்வதில் நான் பாக்கியமாக பெருமையாக கருதி விடைபெறுகிறேன்.

நன்றி
வணக்கம்.

* * * * *

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**